சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **156 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 14.10.2025 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : பாலமுருகன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

MRS பேக்கரிக்கு எதிரே எனக்கு டீ கடை உள்ளது என்பவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சாலை விபத்தில் இறந்துபோன காளியப்பன் எந்த ஊர் என்றால் செட்டியபட்டி. மேற்படி காளியப்பனை 40 ஆண்டுகளாக தெரியும். மேற்படி சாலை விபத்தானது தென்வடல் ரோட்டில் நடந்தது. மேற்படி விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றங்களில் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லியுள்ளேன். முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் சாதாரண வேகத்தில் தான் லாரியை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஓட்டி சென்றார் என்றும், லாரிக்கு முன்னால் நடந்து சென்றுக்கொண்டிருந்த காளியப்பன் திடீரென்று சாலையை கடந்ததால் தான் மேற்படி சாலை விபத்து நடந்துள்ளது என்றால் சரியல்ல. காளியப்பன் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத விபத்தை பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.